CTTE
Chevalier T. Thomas Elizabeth
College for Women, Estd. 1985
Managed by Chevalier T. Thomas Education Trust
PERAMBUR | 044 2537 5753
Affiliated to University of Madras | Re-accredited by NAAC 'A' Grade
WOMEN EMPOWERMENT | HOLISTIC EDUCATION
Values | Knowledge | Skills | Quality | Lifelong Learning

# சான்றிதழ்

**முனைவர். பெ. மோகன்,** பேராசிரியர், தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், பல்லாவரம், சென்னை, **தமிழ் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்புகள்** என்ற பொருண்மையில் **செவாலியர் டி. தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி, தமிழ்த்துறை, உலகத் தமிழ்க் காப்பிய ஆராய்ச்சி நிறுவனம், மலேசியா மற்றும் சுடர்மணிப் பதிப்பகம்** இணைந்து 08.08.2025 அன்று நடத்திய பன்னாட்டுக் கருத்தரங்கில் **சங்க இலக்கியத்தில் குடும்பக் கட்டமைப்பு** என்ற தலைப்பில் கட்டுரை வாசித்தார் எனச் சான்றளிக்கப்படுகிறது.

அ.விமலாராணி

**முனைவர்**
**அ.விமலாராணி**
ஒருங்கிணைப்பாளர்
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

க.பிரீதா.

**முனைவர்**
**க.பிரீதா**
மொழித் துறைத் தலைவர்
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

S. Sridevi

**முனைவர்**
**சு. ஸ்ரீதேவி**
முதல்வர்
சி.டி.டி.இ. மகளிர் கல்லூரி

# தமிழ் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்புகள்

பன்னாட்டுக் கருத்தரங்க ஆய்வுக் கட்டுரைத் தொகுப்பு

பதிப்பாசிரியர்
**முனைவர் அ. விமலாராணி**



வெளியீடு

தமிழ்த்துறை
செவாலியர் டி. தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி
சென்னை - 11

# தமிழ் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்புகள்

© தொகுப்பாசிரியர் : முனைவர் அ.விமலாராணி

முதல் பதிப்பு : 2025

வெளியீடு : சுடர்மணி

23, 8வது மேற்கு தெரு, மேத்தா நகர் விரிவு, குன்றத்தூர்,

சென்னை - 600069. அலைபேசி : 9842730808

அச்சாக்கம் டுடே ஆப்செட், சென்னை

பக்கங்கள் - XXI- 278 = 299

விலை : ரூ .300/-

TAMIL ILAKKKIYANKALIL KUDUMPA

KATTAMAIPPUKAL

© Author : Dr.A.VIMALARANI

First Edition : 2025

Published by SUDARMANI

No. 23, 8th West Street, Metha Nagar (Extn.) Kundrathur,

Chennai - 600069, Phone: 9842730808

e-mail: sudarmanipathipagam@gmail.com

Printed at : Today Offset, Chennai - 5.

Pages: XXI - 278 = 299

Price : ₹ 300

ISBN : 978-81-987513-9-3

| | | |
|---|---|---|
| 29. | வள்ளுவர் காட்டும் இல்லற இலக்கணம் - முனைவர் க.பிரீதா | 171 |
| 30. | மெல்லக் கனாய் பழங்கதையாய் நாவலில் குடும்ப கட்டமைப்பில் பெண்களின் நிலை - செ.ம.புளோரா | 180 |
| 31. | சங்க இலக்கியத்தில் குடும்பக் கட்டமைப்பு - முனைவர் பெ.மோகன் | 184 |
| 32. | பக்தி இலக்கியத்தில் சேக்கிழார் காட்டும் குடும்பக் கட்டமைப்புகள் - ஈ.மோகன்ராஜ் | 189 |
| 33. | கலைஞரின் பொன்னர் சங்கர் புதினத்தில் குடும்பக் கட்டமைப்பு - முனைவர் மு.மோகனலட்சுமி | 194 |
| 34. | குறள் வழியில் குடும்ப விளக்கு - முனைவர் ச.ரஞ்சனி | 200 |
| 35. | சங்க காலத் தமிழரின் வாழ்வியல் - முனைவர் ஜெ.ராஜசெல்வி | 205 |
| 36. | நீயே முளைப்பாய் கவிதையின் குடும்ப கட்டமைப்பு - முனைவர் அ.லீமா | 208 |
| 37. | குடும்ப உறவின் இனிமைக்கு இனியவை நாற்பது கூறும் வழிமுறைகள் - முனைவர் ஜ.வள்ளி | 213 |
| 38. | வெ.இறையன்பு படைப்புகளில் காணலாகும் குடும்பம் குறித்தான சிந்தனைகள் - முனைவர் பா.விக்னேஷ்குமார் | 223 |
| 39. | கம்பராமாயண அரசகுல மகளிரின் இல்லற மாண்பு - த.வித்யா | 230 |
| 40. | பாரதிதாசன் படைப்புகளில் குடும்பக் கட்டமைப்புகள் - முனைவர் அ.விமலாராணி | 236 |
| 41. | தமிழ் இலக்கியங்களில் குடும்பக் கட்டமைப்புகள் - சி.விவேகா | 242 |
| 42. | கபிலன் வைரமுத்து கவிதைகளில் சமுதாயம் - முனைவர் ச.வேணுகோபால் | 246 |

# 31.சங்க இலக்கியத்தில் குடும்பக் கட்டமைப்பு

முனைவர் பெ.மோகன்,
பேராசிரியர், தமிழ்த்துறை,
வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம்,
பல்லாவரம், சென்னை.

## முன்னுரை

மனிதனை விலங்குகளிடமிருந்து வேறுபடுத்தியது, மனித இனம் உருவாக்கிய சமூக உறவு முறையாகும். மனிதனைப் பண்பாட்டு நிலையில் உயர்ந்தவனாக்கியது, குடும்ப அமைப்பு முறையாகும். இவையே, சமூகம் என்னும் மாபெரும் கட்டமைப்பு தோன்றுவதற்கு அடைப்படையாய் அமைகின்றன. மனித இனம் சமூகமாக உருப்பெறத் தொடங்கிய காலம், சங்க காலமாகும். இனக் குழுக்கள், குலங்கள், இவற்றிலிருந்து தோன்றிய குழுத் தலைவன், குறுநில மன்னர்கள் என்று படிப்படியாகச் சமூகம் வளர்ச்சியடைந்துள்ளது. இச் சமூக அமைப்பின் அங்கமான குடும்ப அமைப்பும் உருவாகியுள்ளது.

## சங்க கால உற்பத்தி முறை

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்று நிலங்களை ஐந்து வகையாகப் பாகுபாடு செய்யும் முறை சங்க காலத்திலேயே தோன்றிவிட்டது. தினை என்னும் தானியம் குறிஞ்சி நிலத்தில் விளைந்தது. இது புன்செய் தானியமாகும். முல்லை நில மக்கள் மந்தை மேய்த்தல் தொழிலை மேற்கொண்டனர். மீன் பிடித்தல் முதலிய செயல்பாடுகள் நெய்தல் நிலத்தில் நிகழ்ந்துள்ளன. மருத நிலத்தில் உழவுத் தொழில் மேற்கொள்ளப்பட்டது. மழை பொழியாமல் வரண்ட நிலத்தைப் பாலை என்றழைத்தனர். "குறிஞ்சியும் முல்லையும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிமம் கொள்ளும்" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது. இந்த நிலத்தில் வாழ்ந்த மக்கள் வழிப்பறி செய்தல், கொலைத்தொழில் செய்தல் முதலிய தொழில்களைச் செய்துள்ளனர்.

"பொதுவாக நோக்குமிடத்து, குறிஞ்சி, முல்லை, நெய்தல் என்பனவற்றில் வாழ்க்கை வசதிகள் நிறையக் கிடைக்கவில்லை; அந்நிலங்களில் அமைதியான ஆறுதலான வாழ்க்கை நிலவவில்லை. ஆனால், நெய்தல் நிலத்திலுள்ள பகுதிகளில் கடற்துறைமுக வாணிகத்தாற் பட்டினங்கள் தோன்றின." (ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், பக். 10-11). காவிரியின் நீர்பாசன வளத்தால் செழிப்பான சோழ நாடு உருவானது. "சோழநாடு

பெரும்பாலும் மருத நிளமாக அமைந்திருந்தது." (மேலது, ப.10). நெய்தல் நில துறைமுக நகரமும், வளம்சேர் சோழ நாடும் காலத்தால் பிந்தியவையாகும்.

சங்க காலத் தமிழக நிலப்பரப்பில் வளமான பகுதிகள், வளம் குறைந்த பகுதிகள், வரண்ட பகுதிகள் என்னும் சமச் சீரற்ற நிலைமைகள் இருந்துள்ளன. பெரும்பான்மையானப் பகுதிகள் வளம் குன்றியே இருந்துள்ளன. இதன் காரணமாக, இனக்குழுக்கள் ஓரிடத்திலிருந்து மற்ற இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். இடம்பெயரும் பொழுது, அந்த இடத்திலிருந்த இனக்குழுவுடன் மோதலில் ஈடுபட்டுள்ளனர். ஒரு இனக்குழுவின் செல்வத்தை மற்றொரு இனக்குழு கைப்பற்றும் முயற்சியில் சண்டைகள் தோன்றின. இவ்வாறாக, மோதல்களில் தொடங்கி, போர்கள் வரை வளர்ந்துள்ளன. இப்படியானச் சூழலில் ஒவ்வொரு இனக்குழுவும் தங்களைத் தற்காத்துக்கொள்ள வேண்டியது முதல் தேவையாகும். அதாவது, தங்களைக் குழுவாக ஒருங்கிணைக்கத் தொடங்கி, பெரிய குழுவாக அல்லது சமூகமாக வளரத்தெடுக்கத் தொடங்கினர். வாழ்வதற்கானத் தேவை, அதற்கானப் பேராட்டம், மோதல்கள் ஆகியவற்றிலிருந்து, சமூகமாக ஒன்றிணைவதன் தேவை உருவானது. இவற்றின் விளைவாய் சமூகமும் சமூகத்தின் அங்கமான குடும்பமும் உருவாகிறது.

சமூகமும் குடும்பமும்

இது தற்காலத்திலுள்ள கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் போன்ற அமைப்பை போன்றதல்ல. இனக்குழுக் குடும்ப அமைப்பாகும். தாய்வழிச் சமூகம் தன் அதிகாரத்தை இழந்து, சமூகச் செயல்பாடுகளுக்கு ஆண் தலைமையேற்றக் காலத்தில் தோன்றிய குடும்ப அமைப்பாகும். இக்காலத்துக் குடும்ப மாந்தர்களாகத் தலைவன், தலைவி, பாங்கன், தோழி, தந்தை, நற்றாய், செவிலி, பரத்தைப் போன்றவர்கள் உள்ளனர். இக்காலத்து மாந்தரையும் சமூகத்தையும் பிரித்துப் பார்க்க இயலாது. சமூக நலனே மாந்தரின் நலன்; மாந்தரின் நலனே சமூக நலன்.

குடும்பத்தின் அங்கத்தினர்களான தாய், தந்தை, மகன் ஆகியோரின் கடமைகளைப் பற்றியும், சமூக அங்கத்தினர்களான கொல்லன், அரசன் ஆகியோரின் கடமைகளைப் பற்றியும், புறநானூற்றுச் செய்யுள் பின்வரும் கருத்துகளைக் குறிப்பிடுகின்றது.

"ஈன்று புறந்தருதல் என் தலைக்கடனே
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே"(புறம்: 312)

ஒரு பிள்ளையைப் பெற்றுப் பாதுகாத்தல் தாயின் கடமையாகும். அவனைச் சான்றோனாக வளர்த்தெடுத்தல் தந்தையின் கடமையாகும். போர்க் கருவிகளை செய்து கொடுத்தல் கொல்லரின் கடமையாகும். கையில் வாளேந்தி, போர்த்தொழில் பழகி, போரில் பகைவரை வென்று, நாட்டைக் காத்து, அரசன் ஆட்சிபுரிய துணையாய் நிற்றல் இளைஞனின் கடமையாகும். சமூக நலனும் குடும்ப நலனும் பிரிக்க இயலாதவாறு, ஒன்றுடன் ஒன்று இரண்டறக் கலந்துள்ளது என்பதையே செய்யுள் வலியுறுத்துகின்றது. இக்கருத்துகள் பெண்பாற் புலவரால் வலியுறுத்தப்பட்டுள்ளது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சமூகப் பொறுப்பு

சங்கச் சமூகத்தைப் பொறுத்தவரை, ஆண்களுக்கான சமூகப் பொறுப்பு என்பது முதன்மையானதாகும். ஒரு நாடு சிறந்து விளங்க வேண்டுமென்றால், அங்குள்ள ஆண்கள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்று ஔவையார் குறிப்பிடுகிறார். இதனை,

"நாடா கொன்றோ காடா கொன்றோ
அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறநா.187.)

என்னும் புறநானூற்றுப் பாடல்வழி அறியலாம்.

சமூகம் என்னும் கட்டமைப்பும், அதன் அங்கமானக் குடும்பம் என்னும் கட்டமைப்பும் ஆடவரின் நற்பண்புகள் சார்ந்தே அமைகின்றது. ஆடவரைச் சார்ந்து இயங்குவதைப் போலப் பெண் மாந்தர்கள் அமைந்துள்ளனர். ஆனால், அவர்கள் இரண்டாம் இடத்துக்குரியவர்கள் அல்லர்.

அகத்திணை உள்ளடக்கம்

சங்க இலக்கிய அகச் செய்யுள்களின் உள்ளடக்கம், அன்பினால் மனமொத்தக் காதலாகும். கைக்கிளை, பெருந்திணை ஆகியவை தொல்காப்பியரால் குறிப்பிடப்பட்டிருந்தாலும், அவை தவிர்க்கப்பட்டுள்ளன. அன்பின் ஐந்திணைகளையே அகச் செய்யுள்கள் சிறப்பித்துப் பாடியுள்ளன.

தலைவனும் தலைவியும் அன்பால் பிணைந்து வாழ்வதற்கு விரும்புகின்றனர். நீரில் இணைபிரியாமல் நீந்திச் செல்லும் அன்றில் பறவையானது, பூக்கள் இடைப்படும்போது பிரிய நேரிடும், குறுகிய நேரத்தைக் கூடத் தாங்கிக் கொள்ளாது துன்பம் கொள்ளும். அதைப் போன்று அன்போடு புணர்ந்திருக்க வேண்டும், என்னும் தலைவியின் விருப்பத்தை,

"பூவிடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமமொடு" (குறுந்.57)

என்னும் கவிதையின் வரிகளின் வெளிப்படுகின்றது.

மேலும், இந்தப் பிறவியில் மட்டுமல்ல, அடுத்தப் பிறவியிலும் நீயே என் கணவனாக இருக்க வேண்டும்; நானே உன் மனம் விரும்பும் மனைவியாக வேண்டும் என்று குறுந்தொகைத் தலைவி கூறுகிறாள்.

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவனை
யானா கியர்நின் னெஞ்சுநேர் பவளே." (குறுந்.40)

மனைவியுடன் கணவனுக்கு இருக்க வேண்டிய அன்பின் ஆழத்தையும் உறவுப் பிணைப்பையும் மேற்கண்டவாறு சங்க இலக்கியச் செய்யுள்கள் வலியுறுத்துகின்றன.

அன்பினால் மனமொத்தக் காதலை வலியுறுத்தியதன் மூலம் ஒற்றுமையான குடும்பத்தையும், சிறந்த சமூகத்தையும் கட்டமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. "பண்பாட்டு வளர்ச்சியின் ஒரு முக்கியமான அமிசம் ஒற்றுமையான குடும்பமாகும். இயற்கை நெறிக் காலத்தில் களவொழுக்கம் மலிந்திருந்தது. களவொழுக்கத்திற்குத் தடைகள் பல ஏற்பட்டன. வரைவு நிகழ்ந்து இல்லறம் தொடங்கிய பின்னரும் தலைவன் பிரிந்து செல்ல வேண்டிய நிமித்தங்கள் தோன்றின. பரத்தையிற் பிரிவும் இடம்பெற்றது. சோதனைகள் நிறைந்திருந்த காலத்தில் உண்மைக் காதல் பிரகாசிப்பதற்கான சூழ்நிலை தோன்றியது. காதலின் ஆழத்தை வற்புறுத்திக் கூறும் போக்கும் காணப்படுகிறது. மனைவியே மனைக்கு விளக்கம் ஆனாள்." (ஆ.வேலுப்பிள்ளை, தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப. 21).

## உடன்போக்கும் இல்லறமும்

சங்க காலத்திலும் தலைவின் பெற்றோரால் ஏற்கப்படாத காதலும் இருந்துள்ளன. அவ்வாறான சூழலில் தலைவனும் தலைவியும் உடன்போக்கில் ஈடுபட்டுள்ளனர். தலைவனும் தலைவியும் தமக்குள் விட்டுக் கொடுத்து, இரண்டறக் கலந்து, அன்பான குடும்ப வாழ்க்கையை நடத்தியுள்ளனர். அதனைப் பெற்றோர் கண்டு இன்புற்றுள்ளர். இதனை,

"முளிதயிர் பிசைந்த காந்தண் மெல்விரல்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதல் முகனே." (குறுந்.167)

என்னும் குறுந்தொகைப் பாடல்வழி அறியலாம்.

## விருந்தெதிர் கோடல்

அன்பு சிறக்கத் தலைவனும் தலைவியும் இல்லறம் நடத்துதலும், விருந்தினரை ஏற்று உபசரித்தும் சிறந்த இல்லறத்திற்கான அடையாளமாகத் திகழ்ந்துள்ளன. இரவு

நேரத்தில் விருந்தினர் வந்தாலும், மன மாறுபாடின்றி, விருந்தினரை ஏற்று உபசரிப்பவளே சிறந்த இல்லாள் என்று நற்றிணைக் குறிப்பிடுகிறது. இதனை,

"அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல் இயற் குறுமகள்" (நற்.142)

என்னும் கவிதை வரிகளின் மூலம் அறியலாம்.

குடும்பமும் குழந்தைப் பேறும்

நிறைவான குடும்பம் என்பது குழந்தைச் செல்வம் உள்ளதாகும். குழந்தைச் செல்வம் இல்லாத குடும்பம், குறையுள்ள குடும்பமாகும். எந்த செல்வமும் குழந்தைச் செல்வத்திற்கு ஈடாது என்று புறநானூறு கூறுகிறது. இதற்கு,

"படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும்
உடைப் பெருஞ் செல்வர் ஆயினும் இடைப் படக்
பயக் குறை இல்லை தாம் வாழு நாளே." (புறநானூறு,188)

என்னும் வரிகள் சான்று பகிர்கின்றன.

இல்லறப் பயன்

நல்ல இல்லறத்திற்கு பின்வருமாறு தொல்காப்பியம் இலக்கணம் வகுத்துள்ளது. அன்பான குடும்பத்தை நிகழ்த்தி, நல்ல மக்களைப் பெற்று-வளர்த்து, சுற்றத்தாருடன் அறநெறிப்படிச் சேர்ந்து வாழ்ந்து, தங்கள் சார்ந்துள்ள சமூகம் மேம்பாட்டுக்குரிய பங்களிப்பைச் செய்தல், நல்ல இல்லறத்தின் பயனாகும். இதனை,

"காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே." (கற்பியல்,நூற்.- 51)

என்னும் நூற்பாவில் தொல்காப்பியர் வரையறுத்துள்ளார்.

முடிவுரை

சங்க இலக்கியம் அன்பான கணவன் மனைவி உறவை வலியுறுத்தியுள்ளது. அதன் பயனாய் நல்லதொரு குடும்பம் உருவாக வேண்டும் என்று குறிப்பிடுகிறது. அக் குடும்பம் சமூக அமைப்பை மேம்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்னும் நோக்கத்தை முதன்மையாகக் கொண்டுள்ளது.